வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 136/2020

வழக்கு சாட்சி LW7 /PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராம்குமார் | ஜாதி | |
| கணவர்/தந்தை | கிஷோர் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 44 |

தேதி 12.03.2025

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் நங்கநல்லூர் பகுதியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் விபரம் பற்றி எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிஅளிக்கப்பட்டது.**

கடந்த 23.10.2017 ம் மதியம் 2.30 மணிக்கு கதிர்வேடு பேருந்து நிறுத்தம் அருகே ஒரு குற்ற வழக்கு சம்மந்தமாக போலீசார் ஒரு நபரை கைது செய்தார்கள் என்றும் அவர் தன்னிச்சையாக அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ய என்னை சாட்சியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார்கள் என்றும், அதன் பேரில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும், பின்பு அந்த நபர் அவரிடம் இருந்து ஆஜர் செய்த வழக்கு சொத்தான கத்தியை போலீசாரிடம் ஆஜர் படுத்தும்போது கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தேன் என்றும்,

போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.